இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 06
இறுதிப் பரீட்சை – 2008
LWU 3323/4314/4323 – தொழில் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 01.04.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. கொழும்பில் வாடகை வண்டிச் சேவைகளை வழங்கும் ஜெட் கெப் என்ட் கம்பனிக்கு அஜித் தமது மோட்டார் காரினை வாடகைக்கு கொடுத்திருந்தான். அஜித் காரினைப் பராமரித்ததுடன் ஒரு மாதத்தில் அஜித்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாடகையின் அடிப்படையில் அவரது கொடுப்பனவுகள் கணக்கிடப்பட்டது. மோட்டார் காரிற்கு கம்பனியின் இலச்சினையுடன் கூடிய, கம்பனிக்குரிய நிறப்பூச்சு பூசவேண்டியிருந்தது. அவர் கம்பனியுடைய சீருடையை அணியத் தேவைப்படுத்தப்பட்டார். மேலும் கம்பனியின் சேவைகளுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக மோட்டார் காரினைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

   எவ்வித காரணமும் காட்டப்படாது ஜெட் கெப் என்ட் கம்பனியானது அஜித்துடனான ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியது.

   கம்பனியின் வேலையாள் என்ற அடிப்படையில் அஜித் ஏதேனும் நிவாரணத்திற்கு உரித்துடையவரா என ஆராய்க.

2. "இலங்கையின் தொழில் சட்டங்கள் பெண் வேலையாட்களை பொருளாதார சுரண்டல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து போதுமானளவு பாதுகாக்கின்றது".

   மேற்கண்ட கூற்றுடன் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

3. 2000ம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து வருணி பொதேஜு என்ட் கம்பனி லிமிடெட் இல் நிறைவேற்று அலுவராக தொழில் புரிந்தாள். நாற்பது வேலையாட்களின் வேலையை அவள் மேற்பார்வை செய்தாள். 2007 செப்டொம்பர் 23ம் திகதி அலுவலகம் தொடர்பான வேலை ஒன்றினை முடித்துவிட்டு அலுவலகத்திற்கு திரும்பும் போது அவள் ஓர் விபத்தில் சிக்குண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். அவள் வைத்தியசிகிச்சைக்கு உட்பட்டு இருந்தமையால் ஒரு மாதகாலமாக அலுவலகத்திற்கு செல்ல முடியாதிருந்தாள். அவள் சுகவீனமுற்றிருந்த காலப்பகுதியில் கம்பனி அவளுக்கு சம்பளம் வழங்கவில்லை.

வேலைக்கு திரும்பியவுடன் தனது அதே தொழில் அந்தஸ்திற்குட்பட்ட வகையில் கிரிஷாந்தி எனப்படும் கம்பனியின் பணிப்பாளர் ஒருவரின் மகளையும் வேலைக்கமர்த்தியிருந்தமையை வருணி அறிகின்றாள். வருணியின் தொழில் அதிகாரத்தினை தொடர்ச்சியாக கிரிஷாந்தி சட்டை செய்யாது விட்டதுடன் சிற்றூழியர்கள் உள்ளடங்கலாக ஏனைய ஊழியர்கள் முன்னிலையில் வருணியை கடுமையாக விமர்சனம் செய்தாள். கம்பனியின் தொழில் சூழலின் மீதான தனது அதிருப்தியினை வருணி தமது முகாமையாளருக்கு அறிவித்தாள். நிருவாகம் இந்நிலைமை தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதுடன் நிலைமை மிக மோசமடைந்தது மாத்திரமன்றி சகிக்க முடியாததுமாகியது.

வருணி தொழில் தொடர்பான அழுத்தம் காரணமாக மிக்ரென்(Migrane) நோயினால் அவதியுற்றாள் என்பதுடன் அலுவலகத்திற்கு சமூகம் தரவில்லை. அவள் வைத்தியரை அணுகியதுடன் அவர் மருந்துகளை குறித்துரைத்தார். குறித்த சூழ்நிலை தொடர்பான எல்லா தகவல்களையும் மற்றும் நிலைமை தொடர்ந்திருப்பின் தொழில் இருந்து விலகிச் கொள்வதனைப் பற்றி தாம் சிந்திப்பதாகவும் குறிப்பிட்டு வருணி நிர்வாகத்திற்கு ஓர் கடிதத்தினை எழுதினாள். கிருஷாந்தி வருணி மீது அதிகமாக பகைமை கொண்டாள்.

மேலும் ஒரு மாதகாலம் அவதியுற்ற வருணி 2008ம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி வலுவுக்கும வகையில் தமது பதவியில் இருந்து விலகினாள்.

கம்பனியிடம் இருந்து ஏதேனும் நிவாரணம் அத்துடன் /அல்லது நன்மைகளை கோர முடியுமா என வருணி அறிய விரும்புகின்றாள்.

வருணிக்கு ஆலோசனை வழங்குக.

4. “தொழிலாளர்களாலும் மற்றும் அவர்களது தொழிற் சங்கங்களினாலும் அனுபவிக்கப்படும் அடிப்படை உரிமைகளில் ஒன்று வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமையாகும். அது அவர்களது கூட்டு பொருளாதார மற்றும் சமூக அக்கறைகளைப் பாதுகாப்பதற்கான பிரிக்கமுடியாத உரிமைகளின் பகுதியாகும்”.

மேற்கண்ட கூற்றில் இருந்து உம்மால் இனங்காணக்கூடிய உரிமை/உரிமைகளைப் பாதுகாப்பதற்கான திருப்திகரமான சட்டப்பின்னணியினை இலங்கை கொண்டுள்ளதா என விளக்குக.

5. 2007 மார்ச் மாதம் முதலாம் திகதி வலுவுக்கு வரும் வகையில் காலூ பிக்ஸ் கம்பனி நிமல் மற்றும் சுனிலை வேலைக்கமர்த்தியது. 2007 மார்ச் மாதம் முதலாம் திகதி கம்பனி அவர்களது சேவையை முடிவுறுத்தியது. 2008ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி வலுவுக்கு வரும் வகையில் கம்பனியானது சுனிலை தகுதிகாண் தொழிலாளியாக மீண்டும் தொழிலில் அமர்த்தியது. 2008ம் ஆண்டு மார்ச் 21ம் திகதி கம்பனி சுனிலின் சேவையை திறமையின்மை மற்றும் தகையின்மை காரணமாக முடிவுறுத்தியது. ஒரு வருட காலப்பகுதியிலுள் நிமல் மற்றும் சுனில் ஆகிய இருவரும் எல்லா வேலை நாட்களிலும் வேலைக்கு சமூகமளித்தனர். அவர்களது காலப்பகுதியில் கம்பனி பத்து தொழிலாளர்களை தொழிலுக்கமர்த்தியிருந்தது. மேலும் நிமல் மற்றும் சுனில் ஆகியோர் ஏனைய தொழிலாளர்களுடன் மிகவும் நட்புடன் காணப்பட்டனர்.

அவர்களது மேலாளர் அவர்களின் சேவையில் திருப்தியடைந்திருந்தார். மேலும் அவ் இருவருக்கும் சம்பள உயர்வினையும் பரிந்துரைத்திருந்தார்.

நிமல் மற்றும் சுனில் ஆகிய இருவரும் அவர்களது வேலை நிறுத்தத்திற்கு எதிராக நிவாரணம் கோர விரும்புகின்றனர்.

அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

6. "1950ஆம் ஆண்டின் 43ம் இலக்க தொழிற் பிணக்குகள் சட்டம் தொழிற் பிணக்குகளை தீர்ப்பதற்கும் சுமுகமான தொழில் உறவுகளைப் பேணுவதற்கும் திருப்திகரமான பொறிமுறையை வழங்குகின்றது."

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

7. பழச்சாற்றினையும் ஜாம் இனையும் உற்பத்திசெய்யும் நோக்குடன் சீ – ப்ருட்ஸ் கம்பனி லிமிடட் ஆனது நான்கு ஆண் வேலையாட்களை தமது அலுவலக சேவையில் இணைத்துக்கொள்ளக் கருதினர்.

தொழிலாளர்களுக்கு ஏற்புடைய தொழில் நிபந்தனைகள் மற்றும் வாசகங்கள் அத்துடன் அத் தொழிலாளர்களுக்கு தொழில் சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நியதிச்சட்ட நன்மைகளையும் பற்றி கம்பனி நிர்வாகம் உமது ஆலோசனையை வேண்டி நிற்கின்றது.

சட்டங்களின் இயைபுடைய பிரிவுகளை தொடர்புறுத்தி ஆலோசனை வழங்குக.

8. பின்வருவனவற்றின் மீது குறிப்பெழுதுக.

(அ) சேவை ஒப்பந்தத்தின் தன்மையை மாற்றியமைத்த அபிவிருத்திகள்

(ஆ) சர்வதேச தொழில் ஸ்தாபனச் சமவாயங்களின் மையப்பகுதியில் உள்ளடங்கியுள்ள கொள்கைகள்.

(பதிப்புரிமையுடையது)